# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2019–ம் வருடம் ஜனவரி மாதம் 25–ம் தேதி காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருட்கள்

1) இந்நகராட்சிக்குட்பட்ட மருந்துக் கோட்டை உரக்கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதால் அதனை அனைத்து தீயணைப்பு துறையினர் மூலம் தீயை அனைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி தீயணைப்பு பணிகள் மேற்கொண்ட போது தீ கொழுந்து விட்டு எரிந்த நிலையில் உடனடியாக 3000 லிட்டர் (ம) 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு தண்ணீர் லாரிகள் மூலமாகவும் மேற்படி குப்பைகளை கிளறி விட்டு அகற்றும் விதமாக (Hitachi) பொக்லைன் இயந்திரம் வரவழைக்கப்பட்டு 3–1–2019 (ம) 4–1–2019 ஆகிய இரு நாட்களாக மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

நகராட்சி சட்டம் விதி எண்.15–ன் கீழ் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. பி. ஆல்டின் கிலாரி என்பவருக்கு பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொண்டதையும் , மேற்கண்ட பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 60000/– க்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 73/2019/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.1402**

அனுமதிக்கப்படுகிறது.

2) இந்நகராட்சி வருவாய் நிதி 2018–19–ன் கீழ் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்கண்ட தெருவிளக்கு உதிரி பாகங்கள் விநியோகம் செய்யவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | தெருவிளக்கு உதிரி பாகங்களி விபரம் | எண்ணம். |
|---|---|---|
| 1. | 4' Tube (40W Floresent) | 1000 Nos |
| 2. | LED 30W Fitting (Philps/Havells/equiavent) | 100 Nos(Luker) |

| | | |
|---|---|---|
| 3. | Tube Light side Holder | 1000 Nos |
| 4. | Hoock up wire | 10 coil |
| 5. | 1/18 V.I.R. Wire | 10 coil |
| 6. | 7/20 V.I.R. Wire | 4 coil |
| 7. | Insulation Ta Role (19mm) | 50 Nos (Roll/10mtr) |
| 8. | 3/20 V.I.R. wire | 2 coil |
| 9. | 18W CFL Lamps | 50 Nos |

அ.கு– மேற்படி தொகையை பொது நிதியில் இருந்து வழங்கலாம்.

(ந.க.எண்.2122/2018/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண்.1403</u>

அனுமதிக்கப்படுகிறது.

3)நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 47718/2013/UGSS, நாள் 02–5–2018–ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கூட்டம் நாள் 07–01–2019–ன் படியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதன் படியும், Fecal Sludge Treatment Plant (FSTP)20 KLD அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியதன் படி இந்நகராட்சிக்குட்பட்ட மருந்து கோட்டை உரக்கிடங்கில் மேற்கண்ட (FSTP)20 KLD ஆலை அமைக்க ரூ.213.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள இந்நகராட்சி பொது நிதியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் IUDM –திட்டத்தின் கீழ் நிதி வழங்க கேட்டு அதற்கான மதிப்பீட்டுப் பிரேரணையினை நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி வழியாக அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–மேற்கண்ட திட்டப் பணிகளுக்கான முழு செலவு தொகையையும் அரசு மானியமாக பெற்று செலவு செய்யலாம்.

(ந.க.எண். 120/2019/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1404</u>**

அனுமதிக்கப்படுகிறது

ஒப்பம்/–
தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.